RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# தமிழகத்தில் நடுகற்கள்

செ. கார்த்திகேயன் [அ] *

[அ] தமிழ்த்துறை (மொழி), கற்பகம் உயர்கல்விக் கழகம், கோவை - 21, தமிழ்நாடு இந்தியா

# The Tradition of Hero Stones in Tamil Nadu

**S. Karthikeyan [a, *]**

[a] Department of Languages, Karpagam Academy of Higher Education: Coimbatore-21, Tamil Nadu, India

*Corresponding Author:
karthikeyan.selvam@kahedu.edu.in

**ABSTRACT**

Throughout history, societies have preserved their past by recording significant events and cultural traditions. The history of hero stones (*Nadukal*) can be reconstructed through archaeological evidence, non-oral and oral traditions, inscriptions, and literary sources. Among the ancient Tamils, the custom of erecting memorial stones in honor of those who sacrificed their lives and worshipping them was a deeply rooted cultural tradition. These hero stones stand as enduring symbols of courage, sacrifice, and collective memory within Tamil society. A Nadukal is a commemorative stone erected in memory of a warrior who died heroically in battle or an individual who sacrificed his life for the welfare and protection of the community. Such memorials are also known as Veerakkal (hero stones) or memorial stones, reflecting the high esteem accorded to bravery and selfless service. Beyond commemorating individual heroism, these stones also preserve valuable information about the social, political, and religious life of ancient Tamil society. This article examines the tradition of hero stones in Tamil Nadu by exploring the reasons for their erection, their historical antiquity, and the categories of individuals for whom they were established. It highlights the cultural and historical significance of *Nadukal* as enduring monuments that preserve the memory of sacrifice, valor, and the ethical ideals of the Tamil people.

**Keywords:** Hero Stones, Religious Life, Tamil People, Memorial Stones

## முன்னுரை

மனித சமூகங்களில் மிகவும் தொன்மையான வாழ்வியல் முறைகளையும், பண்பாட்டு முறைகளையும் கொண்ட சமூகமாக தமிழ் சமூகமானது கருதப்படுகிறது. இவற்றை பறைசாற்றுவதற்கான காரணங்களும், சான்றுகளும் நிறைய உண்டு. அவற்றுள் ஒன்று நடுகல் வழிபாடு. இறந்தவர்களின் நினைவாக கல் நடப்பட்டு அவற்றை அந்த சமூக மக்கள் வருடந்தோறும் வழிபடக்கூடிய நிகழ்வு இன்றளவும் காணப்படுகிறது. அத்தகைய வழிபாட்டு முறை தமிழர்களிடமும் உண்டு. இது குறித்த இலக்கிய, தொல்லியல் சான்றுகள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. தமிழகத்தில் நடுகற்கள் குறித்து ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தமிழ்நாட்டில் நடுகற்கள்

தமிழ்நாட்டில் நடுகல் எடுக்கும் வழக்கம் மிகப்பழங்காலம் முதலே இருந்துள்ளமையை, தொல்லியல் ஆய்வுகள் மூலம் காணமுடிகிறது. தமிழ்நாட்டில் பல்லவர், சோழர், பாண்டியர் காலத்திலும் கங்கர், பாணர், இராஷ்டிரகூடர் போன்ற அரச மரபினர்களின் காலத்திலும் பிற்காலத்தில்

வந்த ஹொய்சளர், விஜயநகர, நாயக்க மரபினர் ஆகியோரின் காலத்திலும் நடுகற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் தொண்டை மண்டலத்திலும், கொங்கு மண்டலத்திலும் அபரிமிதமான நடுகற்கள் காணப்படுகின்றன. அதாவது செங்கம், தருமபுரி, வடஆற்காடு ஆகிய பகுதிகளில் அதிக அளவில் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

## நடுகற்களின் தோற்றம், வளர்ச்சி

தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட பெருங்கற்கால அமைப்புகள் பெரும்பாலும் இறந்தவர்களுக்காக அமைக்கப்படும் ஈமச்சின்னங்கள் ஆகும். இந்த ஈமச்சின்னங்களில் 90-சதவிகிதம் கல்வட்ட வகையைச் சார்ந்தவை. இவ்வகையான ஈமச்சின்னங்கள் பெரும்பாலான இடங்களில் நடுகற்களாகக் கிடைக்கின்றன. இக்காரணத்தால் கல்வட்ட வகையை ஈமச்சின்னமாகக் கொண்ட மக்களும் நடுகல் எடுக்கும் வழக்கத்தை கொண்ட ஒரே சமூகப் பிரிவை சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்பதை உணர முடிகிறது.

நடுகற்கள் கி.பி. 5-ம் நூற்றாண்டில் இருந்து கிடைக்கின்றன. எனவே கல்வட்ட ஈமச்சின்னத்தை வழக்கமாகக் கொண்ட மக்கள் நடுகற்களின் மூதாதையாகள் என்று கூறலாம். கல்வட்ட வகை ஈமச்சின்னங்கள் எடுக்கும் முறை நின்ற பின் நடுகற்கள் அதன் தொடர்ச்சியாக எழுப்பப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதே காலத்தில் பாண்டிய மண்டலத்தில் தாழிகளில் புதைக்கும் வழக்கம் அதிகம் காணப்பட்டதால் நடுகற்கள் எதுவும் எழுப்பப்படவில்லை. எனவே தாழிகளை ஈமச்சின்னங்களாக கொண்ட மக்கள் நடுகல் எடுக்கும் பழக்கம் இல்லாதவர்களாகக் காணப்பட்டனர்.

## நடுகற்கள் எழுப்பக் காரணங்கள்

பொதுவாகப் பெரும்பாலான நடுகற்கள் அரசனுக்காகப் போர் செய்து உயிர் நீத்தவர்களுக்காக எழுப்பப்பட்டன. குறிஞ்சி, முல்லை, ஆகிய நிலங்களில் நடுகற்கள் அதிகம் காணப்படுகின்றது. இந்நிலங்களின் இடையே வாழ்ந்த மக்கள் பிறிதொரு குழுவைச் சேர்ந்த மக்களின் கால்நடைகளை கவர்ந்து சென்றனர். அவற்றை மீட்பதற்கு ஏற்பட்ட பூசல்களில் உயிர் நீத்த வீரர்களுக்கு நடுகல் எடுத்தனர். இதனை நிரை கவர்தல், நிரை மீட்டல் என சுவைபட விவரிக்கின்றன. கொடிய விலங்கோடு போராடி உயிர் நீத்தவர்களுக்காகவும் நடுகற்கள் எடுக்கப்பட்டன.

## நடுகற்களின் வகைகள்

கொங்கு நாடு, தர்மபுரி, வடஆற்காடு ஆகிய பகுதிகளில் நடுகற்கள் அதிகம் காணப்படுகின்றன. இவை கி.பி.5-ம் நூற்றாண்டு முதல் கி.பி.18-ம் நூற்றாண்டுகளின் காலத்திற்கு உட்பட்டவை ஆகும். நினைவுக்கற்கள், நடுகல், வீரக்கல், சதிக்கல் என மூன்றுவகைப்படும்.

இவை ஒரு நல்ல மனிதனோ, அரசனோ இறந்த போது அவன் நினைவாக நடப்பட்டதாகும். தட்டை வடிவத்தில் ஒரு பக்கம் மட்டும் உருவங்கள் அடியில் எழுத்துக்களும் பொறிக்கப்பட்டோ! அல்லது வெறும் உருவத்துடனோ அமைந்திருக்கும். போரில் வீரம் காட்டி இறந்துபோன வீரனின் பெயரையும், ஆற்றலையும் விளக்கி எழுதி நட்டகல் வீரக்கல் எனப்பட்டது.

வீரனுடன் அவன் மனைவியும் இறந்திருப்பின் இருவருக்கும் சேர்த்து எடுக்கப்பட்ட கல் சதிக்கல் என அழைக்கப்பட்டது. ஆணின் இடதுபுறம் பெண் அமர்ந்த நிலையில் அல்லது நின்ற நிலையில் இருவரும் அவரவரது வலது கையைத் தோளுக்கு அருகில் உயர்த்திக் காட்டுவதாகச் சதிகல் செதுக்கப்பட்டு இருக்கும்.

நடுகற்களின் அமைப்பு, செய்தி ஆகியவற்றின் அடிப்படையில் அவைகளை பல்வேறு வகையாகப் பிரிக்கலாம். போரில் வீரமரணம் அடைந்தவர்களுக்கு மட்டுமின்றி வெவ்வேறு காரணங்களுக்காக இறந்தவர்களுக்கும் நினைவுக் கற்களை மக்கள் தோற்றுவித்தனர்.

தொற்றுப் பூசல்கள், வடக்கிருத்தல் கல், சதிக்கல், கடலுள் மாய்ந்தோர் கல், சித்திர மாடம் துஞ்சியோர் கல், ஊர்க்காத்தான் கல், பெண் மீட்டான் (அ) சிறை மீட்டான் கல், அறம் காத்தான் கல், கழிப் பேராண்மை கல், சாவாரப் பலிக்கல், துறவியர் கல், பள்ளிப் படைக் கோவில், புலிக்குத்திப் பட்டான் கல், பன்றி குத்திப் பட்டான் கல், குதிரை குத்திப் பட்டான் கல், எருது பொருதார் கல், நாய்க்கு நடுகல், கோழிக்கல், நவகண்டகம், பாம்பு தீண்டி மாண்டார் கல், ஆணை மேல் துஞ்சினார் கல், கல்லில் மாடு பொறித்த நினைவுக்கல், கோபுரம் ஏறி உயிர்விட்டான் கல், சத்தியத்தை காக்க உயிர்விட்டான் கல், யானை குத்திப் பட்டான் கல், கிளிக்கு எடுத்த நடுகல், எருமைக்காக எடுத்த நடுகல் என நடுகற்களை பலவாறாகப் பிரிக்கலாம்.

## இலக்கியங்களில் நடுகல் வழிபாடு

இலக்கியங்களில் புறநானூறு, அகநானூறு, ஐங்குறுநூறு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய சங்க நூல்களில் நடுகல் பற்றிய குறிப்புகள் பல உள்ளன. அகநானூறு பாடல் ஒன்றில்,

“நல் அமர்க் கடந்த நானுடை மறவர்

பெயரும் பீடும் எழுதியதர்தொறும்

பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்” [1]

என்று நிரை மீட்டலின் போது உயிரிழந்த ஓர் வீரனுக்கு நடுகல் வைக்கப்பட்டதைக் கூறுகின்றது. மேலும் புறநானூற்று பாடல் ஒன்று,

“பரலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி

மரல்வகுத்து தொடுத்த செம்பூங் கண்ணியொடு

அணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்து

இனி நட்டனரே கல்லும்” [2]

பகை மறவரை ஓடஓட விரட்டிய வீரன் அவனும் போரிலே இறந்துபட்டான். அவனுக்கு பீலியும், கண்ணியும் சூட்டி பெயரும் பொறித்து அவனுக்கு கல்லையும் நட்டதாக அப்பாடல் கூறுகின்றது.

மற்றொரு புறநானூற்றுப் பாடல் ஒன்றில் கரந்தை மறவன் வீழ்ந்து நடுகல்லாகியது பற்றி கூறப்பட்டுள்ளது.

“பல்ஆ தழிஇய கல்லா வல்வில்

உழகை;குரற் கூகை அழைப்ப ஆட்டி

நர்குமுலை அன்ன நறும்பூங் கரந்தை

விரகுஅறி யாளர் மரபிற் சூட்ட

நிரைஇவன் தந்து, நடுகல் ஆகிய” [3]

மலைப்படுகடாம் என்ற கூத்தராற்றுப் படையில் இரு இடங்களில் நடுகல் பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன. நடுகல்லில் உருவங்கள் அல்லது ஓவியங்கள் இருந்ததையும் வழபடும் கடவுளாக நடுகல் இருந்ததையும் இவ்வரிகளில் காணலாம்.

“ஒன்னா தெவ்வர் உலைவு இடத்து ஆர்த்தென

நல்வழி பொடுத்த நாண் உடை மறவர்

செல்லா நல்இசை பெயரொடு நட்ட

கல் ஏசு கவலை எண்ணுமிக பலவே” [4]

இப்பாடலில் மறவன் ஒருவன் பகைவர்களைச் சாய்த்தான், எனினும் போரில் மாண்டான். அவனது புகழைப் போற்றினான். பலரும் நடந்து செல்லும் வழி பிரியும் இடங்களில் அவனுக்கு கல் நட்டனர் என்று மலைப்படுகடாம் கூறுகிறது.

## நடுகல் வழிபாடு

வெட்சி, கரந்தை போர்களில் வீரமரணம் அடைந்த வீரர்களின் நினைவாக நடப்பட்ட நடுகற்களை தெய்வமாகக் கருதி வணங்கி வழிபட்ட நிலை தமிழகத்தில் ஏற்பட்டது. நடுகல் தெய்வமாக வணங்கப்பட்டதற்கு புலவர் மாங்குடி கிழார் சான்றளிக்கிறார்.

"ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை

நடுகல் கைதொழுது பரவும்" [5]

ஆநிரைகளையுடைய கோவலர் உயர்ந்த வேங்கை மரத்தின் நல்ல கொத்துக்களைப் பனையோலையில் கொடுத்து அலங்கரித்து மாலை சூட்டி நடுகல்லை வணங்கினர் என்று புறநானூறு கூறுகிறது.

நடுகல் வழிபாட்டின் பொழுது நடுகல்லின் முன் கள்ளைக் கலங்களில் வைத்து படைத்தனர். செம்மறியாட்டுக் குட்டியை பலி கொடுத்தனர். துடியடித்து ஒலியெழுப்பினர் என்ற செய்தியை,

"நடுகற் பீலிசூட்டித் துடிப்படுத்தத்

தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்" [6]

என்ற பாடல் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. சிற்றூர் வாழ்மக்கள் தம் ஊர்புறத்தே இருந்து நடுகற்களை நன்னீராட்டினர், நெய்யூற்றி விளக்கேற்றினர் நறுமணப் புகை போட்டனர். அதன் புகை தெருக்களில் கமழ்ந்தது.

"இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்

புடைநடு கல்லின் நாட்பலி யூட்டி

நன்னீராட்டி நெய்ந் நளைக் கொளிஇய

மங்கின் மாப்புகை மறுகுடன் கமழும்

அருமுனை இருக்கை" [7]

மேற்கண்ட பாடல்களின் மூலம் நடுகற்கள் தெய்வமாக வணங்கப்பட்டதையும் அவற்றை எவ்வாறு வணங்கினர்? என்பதையும் அறிய முடிகின்றது. தற்போது பல நடுகற்கள் சில மக்களுக்கு குலதெய்வமாக உள்ளது.

## நடுகல் மூலம் அறியலாகும் செய்திகள்

நடுகல் என்பவை அந்தந்தக் கால மரபுகள், அரசர்களின் ஆட்சி, மொழி, கலாச்சாரம், போர் முறைகள் உள்ளிட்ட ஏராளமான அம்சங்கள் குறித்த வரலாற்றுத் தகவல்களைக் கொண்டுள்ளது. இதன் வாயிலாக ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும் ஆவணங்களின் களஞ்சியமாக நடுகற்கள் விளங்கி வருகின்றது என்பது இதன்மூலம் புலனாகிறது.

## முடிவுரை

தமிழகத்தில் பல்லவர், சோழர், பாண்டியர் காலத்திலும், கங்கர், பாணர், இராஷ்டிரகூடர் போன்றோர் காலத்திலும் நாயக்கர் காலத்திலும் நடுகல் எடுக்கும் வழக்கம் உள்ளன. நடுகல் எடுக்கும் காரணங்கள், நடுகற்களின் வகைகள் இக்கட்டுரை வாயிலாக அறியலாகிறது. இலக்கியங்களில்

நடுகற்கள் மற்றும் நடுகள் வழிபாடு. வழிபாட்டில் கல் எடுப்போர், கல் நட்ட இடம், உயிர்ப் பலி பற்றியச் செய்திகளையும் அறியமுடிகிறது. நடுகற்கள் கிடைத்த ஊர், அவற்றின் ஆட்சியாண்டு, காலம் அவற்றின் அமைப்பு பற்றிய செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. பாம்புதீண்டிபட்டான் கல் மூலம் தமிழகத்தின் பல பகுதிகளிலும் நாகத்தை தெய்வமாக வணங்கி வந்தனர் என்பதை அறிய முடிகிறது.

## References

புலியூர் கேசிகன், அகநானூறு

புலியூர் கேசிகன், புறநானூறு

வி. நாகராசன், மலைப்படுகடாம்

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License